# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

| | | |
|---|---|---|
| **Calendar** | : | **Case No.490/2014** |
| **Miscellaneous** | : | |
| **Summary Trial** | : | |
| **Maintenance** | : | |
| **Deposition of witness for prosecution** | : | **P.W.3.சேதுராமன்** |
| **Father's Name** | : | **பெரியகருப்பத்தேவர்** |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 08.11.2021

மு.வி:

நான் தற்போது செக்கானூரணியில் வசித்து வருகிறேன். நான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். 16.06.2013 ஆம் தேதி நானும் கிராம உதவியாளர் சின்னனும் செக்கானூரணி தேவர் சிலை அருகே இருந்தபோது பன்னியான் கிராமத்தை சேர்ந்த வழக்கின் 4வது எதிரி ரவி ஆட்டோவில் வந்தவரை சார்பு ஆய்வாளர் விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார். அப்போது காலை சுமார் 6.30 மணி இருக்கும். அவருடைய வண்டியில் பிராந்தி பாட்டில்கள், பாராசூட் தேங்காய் எண்ணெய், ரின் ஒயிட், துணி துவைக்கும் சோப், டோமெக்ஸ் என்ற கழிவரையை சுத்தம் செய்யும் சோப்பு ஆகியவை பெட்டியில் இருந்தவற்றை எடுத்து கொடுத்து ஆஜர் செய்தார். மேலும் 4வது எதிரி சிங் என்பவருடைய தோட்டத்திற்கு அருகில் மதகு அருகே இருந்து எடுத்து வந்ததாக சொன்னார். அந்த இடத்தில் வைத்து என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் கையெழுத்துக்கள் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள 1வது கையெழுத்துக்கள் என்னுடையது தான். அவை **அ.சா.ஆ.3 மற்றும் 4.** அதன்பிறகு இந்த வழக்கு சம்மந்தமாக 01.07.2013 ஆம் தேதி பன்னியான் விலக்கு அருகே வழக்கின் 1வது எதிரி வயக்காட்டுச்சாமியை ஆய்வாளர் விசாரித்து வாக்கு மூலம் பதிவுசெய்தார். திருப்பூர் பக்கத்திலிருந்து பொருட்களை எடுத்து வந்து சிங் தோட்டத்தில் வைத்திருப்பதாக சொன்னார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது

கையெழுத்து என்னுடையது தான். **அ.சா.ஆ.5.** வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தார்.

கு.வி:

காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது செக்கானூரணி தேவர் சிலை அருகே நானும் சின்னன் என்பவரும் நின்று கொண்டிருந்ததற்கான காரணம் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ரவி என்பவர் வந்த ஆட்டோவின் பதிவு எண் தெரியுமா என்றால் தெரியாது. எத்தனை பிராந்தி பாட்டில்கள் எத்தனை பெட்டிகளில் ரவி ஆஜர் செய்தார் என்று குறிப்பாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். ரின் ஓயிட் எத்தனை பெட்டிகளில் எத்தனை பாட்டில்கள் இருந்தது என்ற விபரம் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். டோமேக்ஸ் எத்தனை பெட்டிகளில் எத்தனை பாட்டில்கள் இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ரவியை அழைத்து கொண்டு என்னை போலீசார் வேறு இடத்திற்கு அழைத்து செல்லவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் ரவி முழுமையாக என்ன சொன்னார் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல எனக்கு தெரியும். ரவி தனக்கு பழக்கமானவர்கள் என்று 3 நபர்கள் பெயர்களை சொன்னார். அவர்கள் பெயர்கள் எனக்கு தெரியாது. செக்கானூரணி சார்பு ஆய்வாளர் எந்த குற்ற எண்ணுக்கு விசாரித்தார் என்றால் குற்ற எண். 242-13 என்ற வழக்கில் விசாரணை செய்தார். பொருட்களை எங்கியிருந்து எடுத்து வந்தார்கள் என்றால் திருப்பூர் பக்கத்திலிருந்து எடுத்து வந்ததாக சொன்னார். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கும்போது என்னுடைய மேல் அதிகாரியிடம் அது சம்மந்தமாக தகவல் தெரிவித்தார்களா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் என் மேல் அதிகாரியிடம் அது குறித்து எழுத்து மூலமாக தகவல் சொன்னேனா என்றால் இல்லை. 01.07.2013 ஆம் தேதி வயக்காட்டுசாமி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் முழுமையாக என்ன சொன்னார் என்று தெரியுமா என்றால் தெரியும். திருப்பூரிலிருந்து பாட்டில் எடுத்து வந்து சிங் தோட்டத்தில் பதுக்கி வைத்திருப்பதாக சொன்னார். நான் சொன்னதுபோல் 16.06.2013 ஆம் தேதி மற்றும் 01.07.2013 ஆம் தேதி நான் சொன்னதுபோல் சொன்ன இடத்தில் வைத்து எந்த கையெழுத்தும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் ரவி மற்றும் வயக்காட்டுசாமி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் என் முன்னிலையில் எந்த பொருளையும் ஆஜர் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் அரசு ஊழியர் என்ற காரணத்தினாலும் வழக்கு பதிவுசெய்த சார்பு ஆய்வாளர் அரசு ஊழியர் என்ற காரணத்தினாலும் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி:

இல்லை.

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

| | | |
|---|---|---|
| **Calendar** | : | **Case No.490/2014** |
| **Miscellaneous** | : | |
| **Summary Trial** | : | |
| **Maintenance** | : | |
| **Deposition of witness for prosecution** | : | **P.W.4.சசிக்குமார்** |
| **Father's Name** | : | **கருத்தக்கண்ணன்** |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 08.11.2021

மு.வி:

நான் தற்போது கம்பத்துக்கு அருகில் புதுப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் கோவிலாங்குளம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 08.07.2013 ஆம் தேதி நான் முதலைகுளம் கிராம நிர்வாக அலுவலராக பணியிலிருந்தபோது கூடுதல் பொறுப்பாக பன்னியான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தபோது செக்கானூரணி காவல் ஆய்வாளர் குற்ற வழக்கு எண்.242-12 வழக்கில் சம்மந்தப்பட்ட 2வது எதிரி நாகராஜ் பன்னியானில் இருப்பதாகவும் அவருடன் வருமாறு என்னை அழைத்து போலீசாருடன் அங்கு சென்றோம். அரசு கள்ளர் நடுநிலை பள்ளி அருகே அங்கியிருந்த 2வது எதிரியை கைதுசெய்து ஆய்வாளர் விசாரணை செய்தார். அவர் அவருடைய கூட்டாளிகள் வயக்காட்டுசாமி, செல்வம், முருகன் ஆகியோர்கள் சேர்ந்து வழிப்பறி செய்து பன்னியான் கிராமம் சிங் தோட்டத்தின் அருகே பதுக்கி வைத்திருப்பதாக சொன்னார். அதில் எக்ஸ்பிரஸ் பிராந்தி, ரின்ஓயிட் சோப்பு, டோமக்ஸ் கழிவரைகளை சுத்தம் செய்யும் சோப்பு மற்றும் பாராசூட் தேங்காய் எண்ணெய் ஆகியவற்றை வைத்திருந்ததாக சொன்னார். மேற்படி பொருட்களை எதிரிகள் ரவி மற்றும் சின்னன் ஆகியோர்கள் மூலமாக குறைந்த விலைக்கு பொருட்களை விற்பதாக சொன்னார்கள். மேற்படி சின்னன, ரவி மற்றும் வயக்காட்டுசசாமி ஆகியோர்கள் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டுள்ளது பற்றி சொன்னார். பின்னர் அன்னைய தினம் தான் ஊருக்கு வந்திருந்ததாக விசாரிக்கும்போது ஆய்வாளரிடம் சொன்னார்.

விசாரித்து முடித்து நாகராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் ஆய்வாளர் என்னிடம் கையெழுத்து வாங்கினார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து நான் அப்போது செய்தது தான். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து **அ.சா.ஆ.6.**

கு.வி:

பன்னியான் கிராமத்தில் எதிரி நாகராஜ்யை விசாரணை செய்தபோது நான் அந்த இடத்திற்கு செல்லும்போது மேற்படி தகவலை என் மேல் அதிகாரியிடம் தெரிவித்தேனா என்றால் தொலைபேசி மூலமாக தெரிவித்தேன். என் மேல் அதிகாரி அவ்வாறு விசாரணைக்கு செல்லுமாறு எனக்கு எழுத்த பூர்வமாக உத்தரவு கொடுக்கவில்லை என்றால் சரிதான். செக்கானூரணி காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்ட காரணத்தினால் நான் அங்கு சென்றேன் என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் சொன்ன இடத்தில் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் நான் சொன்னதுபோல் சொன்ன இடத்தில் வைத்து கையெழுத்து செய்யவில்லை என்றும் நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. நானும் அரசு ஊழியர் என்ற காரணத்தினாலும் இந்த வழக்கின் விசாரணை அதிகாரி அரசு ஊழியர் என்ற காரணத்தினாலும் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ம.வி:

இல்லை.

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

| | | |
|---|---|---|
| **Calendar** | : | **Case No.490/2014** |
| **Miscellaneous** | : | |
| **Summary Trial** | : | |
| **Maintenance** | : | |
| **Deposition of witness for prosecution** | : | **P.W**.5.**பெரியகருப்பன்** |
| **Father's Name** | : | **பெரியாண்டி** |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 08.11.2021

மு.வி:

நான் தற்போது கோவிலாங்குளம் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.4 சசிக்குமார் கிராம நிர்வாக அலுவலர் ஆவார். 08.07.2013 ஆம் தேதி செக்கானூரணி காவல் ஆய்வாளர் என்னையும் அ.சா.4யும் பன்னியான் கிராமத்திற்கு திருட்டு பொருட்களை கைப்பற்றுவது சம்மந்தமாக எங்களை அழைத்து சென்றார்கள். அங்கு எதிரி நாகராஜ்யை விசாரித்ததில் அவர் போதை பொருள், பிராந்தி, ஒயின் ஆகியவற்றை வாங்கி வைத்து வியாபாரம் செய்வதாக ஆய்வாளரிடம் சொன்னார். முருகன், வயக்காட்டுசாமி ஆகியோருடன் சேர்ந்து மேற்படி குற்ற சம்பவம் செய்ததாக சொன்னார். அப்போது ஆய்வாளர் எங்கள் இருவரிடமும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து வாங்கினார். அப்போது மாலை சுமார் 4 மணி முதல் 4.30 மணி இருக்கும். எதிரி நாகராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அது **அ.சா.ஆ.7**.

கு.வி:

நான் சொன்னதுபோல் பன்னியான் கிராமத்தில் வைத்து கையெழுத்து செய்யவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து வெள்ளை பேப்பரில் கையெழுத்து செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னதை தவிர வேறு விபரங்கள் தெரியாது என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் எதிரி நாகராஜ் என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் அதில் நான் சாட்சியாக கையெழுத்து

செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. காவல் துறை அதிகாரி கேட்டுக்கொண்டதற்காக அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ம.வி:

இல்லை.